23rd October 1964]

சொல்லியிருந்தால், அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தைப் பற்றியிருந்தால், அதை எனக்குத் தெரிவித்தால் மேற்கொண்டு கவனம் செலுத்தப்படும்.

புதிய உயர்நிலைப்பள்ளிகள்

*67 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64 பள்ளி ஆண்டில் எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டன?

(இ) இதில் (1) தனியார் (2) அரசினர் (3) மாவட்டக்கழகம் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை எத்தனை?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 190.

(இ) (1) 46.
(2) 4.
(3) 132.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போது ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களை நிர்வகிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். ஜில்லா போர்டு அங்கம் நடைமுறையில் இல்லாமல் இருப்பதால் போர்டு பாடசாலை என்று பெயரிட்டு அதைத் தனியாக வைப்பதற்குப் பதிலாக சர்க்காரே போர்டு பள்ளிகளை எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது ஒரு தனி 'கேட்டிகரி'யாக இருக்கிறது. சர்க்காரே நடத்துகிற பள்ளிகள் சில. பழைய ஜில்லா போர்டு வைத்த பள்ளிகளை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பள்ளிகள் அந்த வகையிலே புதிதாகத் திறக்கப்படுகின்றன. சர்க்கார் பள்ளிகளாகவே இவை செயல்படவேண்டுமென்று சொன்னால் மேலும் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கவனிக்கப்படும்.

ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம்

*68 கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம் :
திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போது அமலிலிருக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தின் காரணமாய் பல பள்ளிகளில் இரண்டு மூன்று வகுப்பு ஒரே ஆசிரியர் போதிக்க வேண்டிய நிலைமையும் 60, 70 மாணவர்களை ஒரே ஆசிரியர் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருப்பது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?